ஆரம்பத்திலிருந்து சொல்லிக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் உட்கார வேண்டும். உறுப்பினர்கள் எல்லாம் உட்காரவேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்..(குறுக்கீடுகள்) உட்காருங்கள், விசுவநாதன் நீங்கள் எந்தப் பிரச்சினையையும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரவில்லை. எனவே நீங்கள் நின்றுகொண்டு இருப்பதே முறையற்ற செயல், உட்காருங்கள். மற்ற உறுப்பினர்கள் அவரிடத்தில் ஒன்றும் பேசவேண்டாம். மற்ற உறுப்பினர்கள் உட்காருங்கள். மற்ற உறுப்பினர்கள் உட்கார வேண்டும். மற்ற உறுப்பினர்கள் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) நீங்களும் உட்காருங்கள். மற்ற உறுப்பினர்கள் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) ஸ்ரீதரன் உட்கார வேண்டும். ஸ்ரீதரன், உட்காருங்கள். (குறுக்கீடு) ஸ்ரீதரன் உட்கார வேண்டும். ஸ்ரீதரன் உட்கார வேண்டும். (குறுக்கீடு) அவரவர் இருக்கையில் அமருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல் குழப்பம்).

முற்பகல் 11-25

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்.)

6 விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை.

குரோம்பேட்டை பகுதியில் புதிய வீராணம் திட்டத்தின்கீழ் குழாய்கள் பதிப்பதற்காக ஸ்ரீராம ஆஞ்சநேயர் கோவில் மற்றும் மசூதி அகற்றப்பட்டது குறித்து.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்பொழுது 110-ன் கீழ் அறிக்கையை வைப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு அருகிலுள்ள குரோம்பேட்டை பகுதியில் தேசிய நெடுஞ்சாலை எண் 45-ல் போக்குவரத்துக்கு இடையூறாக அமைந்துள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு வருகின்றன. அவ்வாறு ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும்போது அருள்மிகு ஸ்ரீராம ஆஞ்சநேயர் திருக்கோயில் மாவட்ட நிர்வாகத்தால் இடிக்கப்பட்டு விட்டதாக செய்தித் தாள்களில் வெளியான செய்தி குறித்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அதன் முழு விவரத்தை தெரிவிப்பதோடு, அது தொடர்பாக ஒரு அறிவிப்பினையும் இந்த மாமன்றத்தின்முன் வைக்க விரும்புகிறேன். (குறுக்கீடுகள்.)

"சென்னை மாநகரின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்கு (குறுக்கீடுகள்) குழாய்கள் மூலமாக குடிநீர் கொண்டு வருவதற்கு வகுக்கப்பட்டுள்ள புதிய வீராணம் திட்டத்தின்கீழ் பூமிக்கு அடியில் குழாய்களைப் பதிக்க வேண்டிய பகுதிகள் பார்வையிடப்பட்டு, அப்பகுதிகளிலுள்ள அரசு நிலங்களில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகள் அனைத்தும் அகற்றப்பட்டு வருகின்றன. (குறுக்கீடுகள்) குரோம்பேட்டை பகுதியில் ஜி.எஸ்.டி. தேசிய நெடுஞ்சாலையில் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டிருந்த அருள்மிகு ஸ்ரீராம ஆஞ்சநேயர் திருக்கோயில் அமைந்துள்ள இடமும் புதிய வீராணம் திட்டத்தின்கீழ் குழாய்கள் பதிக்க வேண்டிய பகுதியில் வருவதை செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆராய்ந்து, பின்பு இந்தக் கோயிலையும் அகற்ற மாவட்ட நிர்வாகம் தீர்மானித்துள்ளது. இப்பகுதிகளிலுள்ள ஆக்கிரமிப்புகள் சமீப காலமாக ஒன்றன்பின் ஒன்றாக அகற்றப்பட்டு வருகின்றன. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசிக் கொண்டிருக்கிற அதே நேரத்தில் இந்த உறுப்பினர்கள் கூச்சல் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

4 தகவல் கோரல்.—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்தும் அவையில் தற்போது நடைபெற்ற நிகழ்வுகள் குறித்தும்—தலைவரின் தீர்ப்பு.—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் உங்களுக்குத் தெரிவித்து விட்டேன். (குறுக்கீடுகள்) இல்லை. பாதுகாப்பற்ற சூழ்நிலையை உருவாக்க முனைந்த இரண்டு உறுப்பினர்களை நடவடிக்கை எடுத்து நான் வெளியேற்றி இருக்கிறேன். எல்லா வகையிலும் பாதுகாப்பு உண்டு. (குறுக்கீடுகள்) இல்லை. இந்த அறிக்கை முடிந்ததற்குப் பிறகு நீங்கள் கேட்டால் நான் பதில் சொல்லலாம். நான் முதலமைச்சர் அவர்களை அறிக்கை வைக்குமாறு . . . (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள், சொல்லி விடுகிறேன். உட்காருங்கள், நான் பேசிய பிறகு சொல்லலாம். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் நிற்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அறிக்கையைப் பேரவைக்கு வைக்குமாறு நான்

கேட்டுக் கொண்டதற்குப் பிறகு, அவர்கள் அறிக்கையை வைப்பதற்கு எழுகிற சூழ்நிலையில், சில உறுப்பினர்கள் எழுந்து பிரச்சினையை எழுப்புவதும், தங்கள் இருப்பிடத்திலிருந்து எழுந்து சென்று ஒரு உறுப்பினரைத் தாக்கச் செல்வதும் நடவடிக்கை எடுக்கத்தக்க குற்றங்களா இல்லையா? (குறுக்கீடுகள்) இல்லை, நான் இங்கிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறேன். எத்தகைய சூழ்நிலையிலும், எந்த உறுப்பினருக்கும், எந்தப் பாதகமும் ஏற்படவில்லை. அப்படி ஏதேனும் ஏற்படுவதாக இருந்தால் அவர்கள் என்னிடத்திலே சொன்னால் அதை விசாரிக்கிறேன். (குறுக்கீடுகள்) அதை விசாரிக்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, நான் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் இங்கே உட்கார்ந்து இருக்கிறீர்கள். எந்த அசம்பாவிதமும் அந்த இடத்திலே நடைபெறவில்லை. இந்த இரண்டு உறுப்பினர்கள் எழுந்து ஓடி அடிக்கச் சென்றது தவிர வேறு எந்த அசம்பாவிதமும் நடக்கவில்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களும், திரு. தம்புசாமி அவர்களும் இங்கே அமர்ந்திருக்கிறபோது நேராக எங்களையோ அல்லது உங்களையோதான் பார்த்துக் கொள்கின்றார்களேயொழிய பின்னாலே நடைபெறுகிறதை எல்லாம் அவர்கள் பார்த்துக் கொண்டிருந்திருக்க முடியாது. ஒரு நிகழ்ச்சியை அவர்கள் கற்பனையாக கூறுகிறார்களேயொழிய, மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்களும், திரு. பழனிசாமி அவர்களும் இங்கே அமர்ந்திருக்கிறபொழுது, நேரடியாக எங்களையேதான் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அல்லது உங்களையேதான் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பின்னாலே, நடக்காத ஒன்றை பார்த்ததாக— அவர்களுக்கு கண் முன்னாலே மட்டும்தான் இருக்கிறதேயொழிய பின்னாலே கண் இல்லை. பின்னாலே கண் இருந்தால் இரண்டு பக்கமும் பார்க்க முடியும். அவர்கள் தவறாகச் சொல்கிறார்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களுக்கு இதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானே பார்த்தேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, நீங்கள், நிற்கிற 3 உறுப்பினர்களும். இந்த திசையை நோக்கி பார்த்துக் கொண்டு இருந்தவர்கள், திரு. திருநாவுக்கரசு அந்த நேரத்திலேயே இல்லை.

(குறுக்கீடுகள்) அப்படி இருக்கிறபோது, நீங்கள் எழுந்து நின்றுகொண்டு ஒரு பிரச்சினையைத் திசை திருப்ப முயற்சிப்பது சரியல்ல. உங்கள் நான்கு பேர்களைவிட, கண்ணுக்கு நேரே நான் பார்த்துக் கொண்டிருந்தவன். திரு. விசுவநாதன் எழுந்தவுடன், நீங்கள் எந்தப் பிரச்சினையும் கொடுக்கவில்லை, உட்காருங்கள் என்று சொல்லிவிட்டேன். அதற்குப் பிறகு, அவர் திட்டமிட்டு ஏதோ சில குரல் எழுப்பிக் கொண்டிருந்தார். அவர் கூச்சல் எழுப்பிக் கொண்டிருந்த சூழ்நிலையில், அந்த இடத்தில் அவரவர்கள் இருக்கையில் இருந்துதான் எழுந்து நின்று கொண்டிருந்தார்கள். எவரும் தங்கள் இருக்கையை விட்டு இன்னொரு இடத்திற்குச் செல்லவில்லை. (குறுக்கீடு) இல்லை, இல்லை. நான் பார்த்ததைவிட நீங்கள் அதிக மாகப் பார்க்க முடியாது. அந்த நேரத்தில் ஞானசேகரன் என்ற ஓர் உறுப்பினர் (குறுக்கீடு) திரு. ஜெய்சன் ஜேக்கப் அவர்கள் இருப்பிடத்திற்குச் சென்று, அவரைத் தாக்க முற்படுவதும் (குறுக்கீடு) இன்னொரு உறுப்பினரும் எழுந்து, நான் சொல்லச் சொல்ல எழுந்து ஓடுவதும் எப்படி முறை யாகும்? (குறுக்கீடு) இல்லை, முதலில் நீங்கள் அதைத் தவறு என்று ஒத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) நான் பார்த்ததை உங்களுக்குச் சொல்கிறேன். அதை முதலிலே ஒத்துக்கொள்ளுங்கள். இந்த அவையை நடத்தவிடக் கூடாது என்று திட்டமிட்டுக்கொண்டு சிலர் செயல்படுவதை அனு மதிக்கக் கூடாது. (குறுக்கீடு) கேளுங்கள், அதை அனுமதிக்கக் கூடாது. அதுதான் இன்றைக்கு நடந்தது. ஞானசேகரனுக்கு என்ன வந்தது? (குறுக்கீடு) அதைத்தான் சொல்கிறேன். அவர்தான் ஏன் போனார் என்று கேட்கிறேன்? ஞான சேகரன் தன் இருப்பிடத்தைவிட்டு ஏன் சென்றார் என்று தான் கேட்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையிலே வினா—விடை முடிவதற்கு முன்னாலேயே சில பேர் எழுந்து நின்று, பிரச்சினைகளைக் கிளப்பியபோது, எங்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. இன்றைக்குச் சபையை ஒழுங்காக நடத்த விடாமல் இருப்பதற்குத் திட்டமிட்டு செய்யப்பட்டிருக்கிறது என்று நாங்கள் கருதினோம். (குறுக்கீடு) நான் முடித்து விடுகிறேன். (குறுக்கீடு) பிறகு நீங்கள் சொல்லுங்கள்....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: இன்னொரு உறுப் பினரை நான் அனுமதித்திருக்கிறேன். (குறுக்கீடு) உட் காருங்கள்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி</u>: பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குப் பின்னாலேகூட, கேள்வி நேரம் முடிந்தவுடன், பல உறுப்பினர்கள் இன்றைக்கு முதல்

நாளாக இருக்கிற காரணத்தால் பல கவன ஈர்ப்புத் தீர்மானங்களையும், ஒத்திவைப்புத் தீர்மானங்களையும் கொடுத்திருக்கலாம். ஆனால் ஒரே கட்சியிலே, பிரதான எதிர்க் கட்சியாக இருக்கும் காங்கிரஸ் கட்சியிலே இருக்கும் உறுப்பினர்கள் ஒவ்வொருவராகக் கேட்டிருந்தால்கூட நியாயம் என்று சொல்லலாம். 10 பேர்கள் எழுந்து நின்று கொண்டு, நான் கொடுத்தேன், நான் கொடுத்தேன் என்று சொல்லுகிறபோது, ஒரே ஒரு சபாநாயகர் இந்த அவைக்கு இருக்கிறார்கள், எனவே அவர் எப்படி பதில் சொல்ல முடியும்? அவை எப்படி ஒழுங்காக நடக்கும்? அதே நேரத்திலேதான் இங்கே எதிர்க் கட்சியிலே இருக்கிற, கம்யூனிஸ்ட் கட்சியிலே இருக்கிற . . . . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : கொடுக்காத பல உறுப்பினர்களும் எழுந்து நின்று கொண்டு கேட்டார்கள்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி</u> : இங்கே இருக்கின்ற 3 பேரும் எழுந்து நின்றுகொண்டு கேட்டார்கள். எனவே ஒரு தலைவர் எப்படி நிலைமையைச் சமாளிக்க முடியும்? ஒவ்வொருவராகக் கேட்டிருந்தால்கூட அதில் நியாயம் இருந்திருக்க முடியும். எனவே தான் எங்களுக்கு என்ன சந்தேகம் ஏற்படுகிறதென்று சொன்னால் இதில் ஏதோ திட்டம் இருக்கிறது, நோக்கம் இருக்கிறது என்றுதான் எங்களுக்குத் தோன்றுகிறது. அதுமட்டுமல்லாமல் இங்கே நடந்த சம்பவத்தைப் பொறுத்தவரையில் 2 காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளியேற வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் உத்தரவிட்ட பின்னாலேதான், அதற்கு பின்னாலேதான், கற்பனையாக ஓர் உறுப்பினரை, அடித்துவிட்டார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நடவடிக்கையை எடுப்பதற்கு முன்னாலே. . . . . . (குறுக்கீடு) நான் முடிக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அந்த நடவடிக்கையை எடுப்பதாக அறிவிப்பதற்கு முன்னாலே இதை அவர்கள் யாரும் தெரிவிக்கவில்லை. அவர்கள் இந்த இடத்தை விட்டுப் போனார்கள். அசம்பாவிதம் நடப்பதைத் தடுக்க வேண்டும் என்பதற்காகப் பேரவைத் தலைவர் உடனடியாக உத்தரவிட்டார்கள். இருக்கைக்கு வர வேண்டும், இல்லை என்றால் நடவடிக்கை என்று சொன்னார்கள். அப்போதும் வரவில்லை. எனவே, மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று சொன்னார்கள். அப்போதும் கூச்சல் குழப்பமாக இருந்தது. வேறு வழியில்லாமல், வெளியேற வேண்டுமென்று உத்தரவிட்ட பின்னாலேதான் நம்மீது தவறு வந்துவிடக்கூடாது, வேறு காரணத்தை முன்னாலே செய்ததாகக் கொண்டுவர வேண்டுமென்பதற்காக திட்டமிட்டு இது செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

எனவே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சபை ஒழுங்காக நடைப்பதற்குத் தாங்கள் ஏதாவது ஒரு வழிவகை செய்து ஒரு முறையை வகுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையினுடைய உறுப்பினர்களைப் பாதுகாக்கின்ற கடமை என்பது (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் அறிக்கையில் பாதியைப் படித்துவிட்டார்கள், அதற்குப் பின்னர், உறுப்பினர்களை அனுமதிப்பது என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் , மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையைப் பொறுத்த மட்டில்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர்.

முற்பகல் 11—35

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அறிக்கை ஒன்றை அளிக்குமாறு தாங்கள் கேட்டுக்கொண்டீர்கள். அது பாதியிலேயே நிற்கிறது. அதை முடித்துவிட்டு, அதற்குப் பிறகு வேறு பல பிரச்சினைகளை மேற்கொள்ளும்படியாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவை விதி 87 (Vii) ''பேரவையின் நடவடிக்கைகளைத் தடுக்கவோ, வேறுவகையான ஒலிகளாலோ அல்லது வேறு வகையிலோ இடைமறிக்கக் கூடாது'' மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையைப் பேரவைக்கு வைக்கலாம் என்று நான் அனுமதி அளித்தேன், அவர்கள் அறிக்கை வைக்கவிருந்த நேரத்தில் சில பல பிரச்சினைகள்

ஏற்பட்டு, அதிலே நான் ஒரு முடிவை எடுத்திருக்கிறேன். முடிவெடுத்து இரண்டு உறுப்பினர்களை, நடவடிக்கை எடுத்துவெளியேற்றி இருக்கிறேன், அதற்குப் பிறகு அவர்கள் அந்த அறிக்கையை வைக்க ஆரம்பித்துவிட்டார்கள். பாதியிலே நின்றுகொண்டிருக்கிறபோது, நான்கு உறுப்பினர்கள் நின்று அவர்கள் அதைப் படிக்க முடியாமல் தடுத்துக்கொண்டிருந்த சூழ்நிலையிலேதான் என்னிடத்திலே கேட்டார்கள்— என்னாலே எப்படிப் படிக்கமுடியும், இப்படி நான்கு உறுப்பினர்கள் நின்றுகொண்டிருக்கிறார்களே என்று. நான் அதனால்தான் உங்களைஉட்காரவும் சொன்னேன். எனவே அவர்கள் அதை முடிக்கட்டும். முடித்ததற்குப் பிறகு உங்களுக்கு வாய்ப்பு வழங்குகிறேன். (குறுக்கீடுகள்) இல்லை. இதை அவர்கள் முடிக்கட்டும். இப்போது பேரவையைத் திசை திருப்பமுடியாது. அவர்கள் முடிக்கட்டும். (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி : நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். (பின்னர், திரு. வே. தம்புசாமி, திரு. ஜி. பழனிசாமி, திரு. இளம் வழுதி மற்றும் திரு. எஸ். திருநாவுக்கரசு ஆகியோர் வெளிநடப்புச் செய்தனர்.)

(6) விதி110-ன்கீழ் முதலமைச்சரின் அறிக்கை—தொடர்ச்சி குரோம்பேட்டை பகுதியில் புதிய வீராணம் திட்டத்தின்கீழ் குழாய்கள பதிப்பதற்காக ஸ்ரீராம ஆஞ்சநேயர் கோவில் மற்றும் பகுதி அகற்றப்பட்டது குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு அருகில் உள்ள குரோம்பேட்டைப் பகுதியில் தேசிய நெடுஞ்சாலை எண் 45-ல் போக்குவரத்துக்கு இடையூறாக அமைந்துள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு வருகின்றன. அவ்வாறு ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும்போது, அருள்மிகு ஸ்ரீராம ஆஞ்சநேயர் திருக்கோயில் மாவட்ட நிர்வாகத்தால் இடிக்கப்பட்டுவிட்டதாகச் செய்தித்தாள்களில் வெளியான செய்தி குறித்து, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, அதன் முழு விவரத்தைத் தெரிவிப்பதோடு, அதன் தொடர்பான ஒரு அறிவிப்பினையும் இந்த மாமன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன்.

சென்னை மாநகரின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குழாய்கள் மூலமாகக் குடிநீர் கொண்டு வருவதற்கு வகுக்கப்பட்டுள்ள புதிய வீராணம் திட்டத்தின்கீழ், பூமிக்கு அடியில் குழாய்களைப் பதிக்க வேண்டிய பகுதிகள் பார்வையிடப்பட்டு, அப்பகுதிகளில் உள்ள அரசு நிலங்களில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகள் அனைத்தும் அகற்றப்பட்டு வருகின்றன. குரோம்பேட்டைப் பகுதியில் ஜி. எஸ். டி. தேசிய நெடுஞ்சாலையில் ஆக்கிரமிப்பு செய்து

கட்டப்பட்டிருந்த அருள்மிகு ஸ்ரீராம ஆஞ்சநேயர் திருக்கோயில் அமைந்துள்ள இடமும் புதிய வீராணம் திட்டத்தின் கீழ் குழாய்கள் பதிக்க வேண்டிய பகுதியில் வருவதை, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆராய்ந்த பின்பு அந்தக் கோயிலையும் அகற்ற மாவட்ட நிர்வாகம் தீர்மானித்துள்ளது. இப்பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் சமீபகாலமாக ஒன்றன் பின் ஒன்றாக அகற்றப்பட்டு வருகின்றன.

16—3—1994 அன்று ஆக்கிரமிப்புகளை அகற்றும்போது இந்தக் கோயிலின் சில பகுதிகளும் இடிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு இடிப்பதற்கு முன்பு, இந்தக் கோயிலில் உள்ள விக்கிரகங்கள் கோயிலிலிருந்து அகற்றப்பட்டு தாம்பரம் நகராட்சி அலுவலகத்தில் மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. யாருடைய மனதையும் புண்படுத்தவேண்டும் என்கின்ற எந்த உள் நோக்கமும் இன்றி, பொது நன்மையை மட்டுமே கருத்தில் கொண்டு, இந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவேண்டிய நிர்பந்தம், மாவட்ட நிர்வாகத்திற்கு ஏற்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கோயிலின் அறங்காவலர்கள், மாற்று இடம் கொடுக்கப்பட்டால் போக்குவரத்துக்கு இடையூறாக அமைந்துள்ள இந்தக் கோயிலை அகற்றி, பாதுகாப்பான புதிய இடத்தில் கோயில் அமைத்துக் கொள்ளத் தயாராக இருப்பதாக, சைதாப்பேட்டை கோட்டாட்சித் தலைவருக்குத் தெரிவித்துள்ளார்கள்.

இதனைக் கருத்தில் கொண்டு, இந்தக் கோயில் மீண்டும் தற்போது அகற்றப்பட்ட பகுதிக்கு மிக அருகிலேயே, அரசுக்குச் சொந்தமான நிலத்தில் புதிதாகக் கட்டிக்கொள்ள எல்லா உதவிகளும் அரசுத்தரப்பிலிருந்து வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). தற்போது கோயில் உள்ள பகுதிக்கு மிக அருகிலேயே அரசுக்குச் சொந்தமான, ஆட்சேபணையற்ற நிலத்தைக் கோயில் கட்டுவதற்காகத் தேர்வு செய்யுமாறு செங்கல்பட்டு—எம். ஜி. ஆர். மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இடம் தேர்வு செய்யப்பட்ட பின்பு, இத்திருக்கோயில் கட்டும் திருப்பணி, விரைவில் மேற்கொள்ளப்படும். எனவே இது தொடர்பாக அப்பகுதியில் வாழ்கின்ற பொதுமக்களோ மாண்புமிகு உறுப்பினர்களோ, கவலை கொள்ள வேண்டாம் என்றும், பாதுகாப்பான ஒரு பகுதியில் போக்குவரத்துக்கு எந்தவிதமான இடையூறும் இன்றி, இந்தத் திருக்கோயிலை மீண்டும் அமைத்துத் தருவதற்கு எல்லா உதவிகளையும் தமிழக அரசு வழங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி.)

முற்பகல் 11-40

அதேபோன்று அக்கோயிலுக்கு அருகில் இருந்த மசூதி ஒன்றும் அதன் நிர்வாகத்தினரால் அகற்றப்பட்டுள்ளது. அந்த மசூதியை மீண்டும் அமைப்பதற்கு ஒரு மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டு,

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

அந்த மசூதியையும் புதியதாகக் கட்டிக்கொள்ள எல்லா உதவிகளையும் இந்த அரசு செய்யும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

(4) தகவல் கோரல்—தொடர்ச்சி.

(அ) உறுப்பினர்கள் கொடுத்த அறிவிக்கைகள் குறித்தும் அவையில்தற்போது நடைபெற்ற நிகழ்வுகள் குறித்தும்—தலைவரின் தீர்ப்பு.—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவ்வளவு முக்கியமான பிரச்சினையைத்தான் பேரவைக்கும் இந்த நாட்டுக்கும் தெரிவிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோரி இருந்தார்கள். அதற்கு அனுமதி அளித்து இருந்தேன். அவ்வளவு முக்கியமான தகவலைத் தடுக்கிற முயற்சியிலேதான் இங்கே சில உறுப்பினர்கள் சிலபல நடவடிக்கைகளிலே ஈடுபட்ட காரணத்தால் இந்த அசம்பாவிதச் சூழ்நிலை ஏற்பட்டது. அந்த நேரத்தில் நடந்ததைத் திரும்பவும் பேரவைக்கு உறுதி செய்து கொள்வது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

வேறு எதையும் என் கவனத்திற்குக் கொடுக்காது பல உறுப்பினர்கள் பேரவையில் பிரச்சினையை எழுப்ப முற்பட்ட பொழுது அவர்களை அமருமாறு நான் திரும்பத் திரும்பச் சொல்லியுங்கூட அவர்கள் அமராத காரணத்தாலே பிரச்சினைகள் ஏற்பட்டு இருக்கின்றன. எனவே, அத்தகைய முறையில் விதி முறைகளுக்குப் புறம்பாக நடைபெறுவதற்கு எந்த உறுப்பினரும் எந்த வகையிலேயும் இடம் கொடுக்க வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்

(7) ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

'' ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப் பெற வேண்டும் :

' 1994ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்.'

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கா.பூ. முனுசாமி.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு.வி.கே.சின்னசாமி.

*371-401 ஆம் பக்கங்களில்இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS